தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (7.12.2023) இந்து சமயஅறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் திரு.வி.க நகர் 6–வது மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேண்டிய நிவாரணப் பொருட்கள் உடனுக்குடன் வழங்குவது தொடர்பாகவும், தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக வெளியேற்றுவது தொடர்பாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுகாதாரமான உணவு வழங்குவது தொடர்பாகவும், தொற்றுநோய் பரவாமல் இருக்க ஆங்காங்கே மருத்துவ முகாம்கள் அமைப்பது தொடர்பாகவும் அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன் மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், புளியந்தோப்பு காவல் துணை ஆணையாளர் ஐ.ஈஸ்வரன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரவாயல் வடக்குப் பகுதி

முகப்பேர் 92-வது வட்டத்தில் பொதுமக்களுக்கு உணவு!

வட்டச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் !

சென்னை, டிச. 8- மதுரவாயல் வடக்கு பகுதி, முகப்பேர் 92 வது வட்டத்திற்கு உட்பட்ட முகப்பேர் கிழக்கு 10, வது பிளாக் பகுதியில் மிக் ஜாம் புயலின் காரணமாக மிக கனத்த மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழக தலைவர் - தமிழக முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டலில் மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி அறிவுறுத்தல் படியும் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் ஆலோசனையின் பேரில் வட்ட கழக செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம் தலைமையில் பொது மக்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழிலரசு, வட்ட நிர்வாகிகள் எம்.எஸ்.சந்தானம், எஸ்.பாலாஜி, சி.காமராஜ், கே.பிரகாஷ், எம்.சி.விமல்தாஸ், பிரியா, சரவணன், சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம், குன்னூர், எடப்பள்ளி ஊராட்சியில் புதிய தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான சாத்தியகூறுகள் உள்ள இடங்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார் உட்பட பலர் உள்ளனர்.

சோழிங்கநல்லூர், அடையாறு, பெருங்குடி, மணலியில்

அமைச்சர் கே.என்.நேரு நிவாரணப் பொருட்கள் வழங்கினார்!

களப்பணிகளை தீவிரப்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவு!

சென்னை, டிச.8- நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என் நேரு அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர், பெருங்குடி, அடையாறு மற்றும் மணலி ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று (07.12.2023) கன மழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகள், பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவு விநியோகம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் சோழிங்கநல்லூர் மண்டலம், நூக்கம்பாளையம் லிங்க் சாலையில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு, தேங்கியுள்ள மழைநீரினை அகற்றும் பணியினைப் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் சிறப்பாக மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வரப்பெற்ற உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களைப் பார்வையிட்டு மக்களுக்கு வழங்கினார்.

பின்னர், ஒக்கியம்மடுகு கால்வாயில் மழைநீர் வடிந்து சீராக செல்வதற்கு ஏதுவாக அக்கால்வாயிலிருந்த ஆகாயத்தாமரைகள் மற்றும் குப்பை கழிவுகளை இயந்திரங்கள் மூலம் அகற்றும் பணியினைப் பார்வையிட்டு மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தினார். பின்னர் அப்பகுதி மக்களுக்காக வரப்பெற்ற உணவு மற்றும் நிவாரணப் பொருட்களைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு எவ்வித குறைபாடுமின்றி வழங்கிட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பெருங்குடி மண்டலம், துரைப்பாக்கம், பல்லாவரம் 200 அடி ரேடியல் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ச்சியாக, மடிப்பாக்கம் குபேரன் நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மீட்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பால், ரொட்டி உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார்.

தொடர்ந்து, அடையாறு மண்டலம், வேளச்சேரி, விஜயநகர் பேருந்து நிலையம் பகுதியில் தேங்கியுள்ள மழைநீர் அகற்றும் பணியினைப் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திடவும், இப்பகுதி மக்களுக்கு சீரான மின்விநியோகம் வழங்கிடவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்

பின்னர், மணலி மண்டலத்தில் எஸ்.ஆர்.எஸ். லிமிடெட் நிறுவனத்தில் மிக்ஜாம் புயல் நிவாரணப் பணிகளுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள உணவு தயாரிக்கும் கூடத்தினையும், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் எவ்வித குறைபாடுமின்றி வழங்கிடவும், நிவாரணப் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, ஆமுல்லைவாயில் பாலம் அருகில், புழல் ஏரியின் உபரிநீர் வெளியேறும் பகுதியினையும், அதன் வரைபடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மக்களின் வாழ்விடங்களில் இயல்பு நிலை திரும்புவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர், மாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையத்தில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அரிசி, ரொட்டி உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், எஸ்.சுதர்சனம், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப் பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர்/மிக்ஜாம் புயல் மீட்புப் பணி சிறப்பு அலுவலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திருவீரராகவ ராவ், திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, சிவகுரு பிரபாகரன், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், ஏ.வி.ஆறுமுகம் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

உயர்த்திய சுங்கக் கட்டணத்தை உடனே குறைப்பீர்!

மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.8 உயர்த்திய சுங்க கட்டணத்தை உடனடியாக குறைக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேலாக சுங்ககட்டணம் வசூலிக்கும் சுங்க சாவடிகளை மூட வேண்டும் என்றும், இரா.கிரிராஜன் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

அவர் பேசியதாவது:-

சுங்கசாவடியில் சுங்க கட்டணம் தொடர்ந்து உயர்த்தப்படுவது துரதிஷ்டவசமானது. இது நாடு முழுவதும் அத்தியாவசிய பொருட்களின் குறிப்பாக உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு வழிவகுக்கும்.

பெட்ரோல், டீசலுக்கு எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயிக்கும் விலையை தவிர, உள்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணமாக பெட்ரோல் மற்றும் டீசலுக்கு முறையே லிட்டருக்கு ரூ.5 முதல் ரூ.2 வரை மத்திய அரசு வசூலிக்கிறது.

2021-2022-ஆம் ஆண்டில் மட்டும் நாடு முழுவதும் 3,08,49,000 மெட்ரிக் டன் பெட்ரோல் மற்றும் 7,66,59,000 மெட்ரிக் டன் டீசல் விற்பனை செய்யப்பட்டு உள்கட்டமைப்பு, மேம்பாட்டு நிதியாக ரூ. 2,70,000 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் ரூ. 20 லட்சம் கோடி சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக வசூலிக்கபட்ட பிறகு சுங்கசாவடியில் அதிக கட்டணம் வசூலிப்பது நியாயமற்றது. சாலை அமைப்பதற்கான காலக்கெடுவிற்கு பிறகு 40 சதவிகித கட்டணத்தை மட்டுமே வசூலிக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

10 ஆண்டுகளுக்கு மேலாக பல சுங்கசாவடிகளில் முழு சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. பஸ், லாரி, சரக்கு வாகனம், கால் டாக்சி, சுற்றுலா வாகனங்கள் போன்ற வணிக வாகனங்களுக்கான சுங்க கட்டண உயர்வை மக்களே ஏற்றுக் கொள்கிறார்கள்.

சுங்க கட்டணத்தை அடிக்கடி உயர்த்தினால் அது தானாகவே சில்லறை விலையை அதிகரித்து இறுதியில். இதுவே விலைவாசி உயர்வுக்கு மூலகாரணமாகி எளிய சாமானிய பொதுமக்களை பாதிக்கும்.

ஆகவே நாடு முழுவதும் அனைத்து சுங்கசாவடிகளிலும் உயர்த்தப்பட்ட சுங்க கட்டணத்தை திரும்ப பெற வேண்டும். தமிழகத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சுங்க கட்டணம் வசூலிக்கும் அனைத்து சுங்கச்சாவடிகளையும் மூட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

மிக்ஜாம் புயல் காரணமாக மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போரூர் சந்திப்பு, வார்டு–151 வளசரவாக்கம் எஸ்.வி.எஸ். நகர், சின்ன போரூர் மருத்துவமனை சாலை, வார்டு–152 வளசரவாக்கம் ஸ்ரீலட்சுமி நகர், வார்டு–155 இராமாபுரம் இராயலா நகர், காந்தி நகர், பூத்தப்பேடு, வார்டு–150 சிவபூதமேடு காமாட்சி நகர், துண்டலம், மான்சரோவர் ராஜா அடுக்குமாடி குடியிருப்பு, ஆலப்பாக்கம் கணேஷ் நகர், வார்டு–148 நெற்குன்றம் பல்லவன் நகர், வார்டு–147 மதுரவாயல் வரலட்சுமி நகர், அயப்பாக்கம் ஊராட்சி ஆகிய பகுதிகளை மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி பார்வையிட்டு உடனடியாக மழைநீரை அகற்றுவதற்கு துறை சார்ந்த அதிகாரிகளை வலியுறுத்தி நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மண்டலம்–11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., அயப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அ.மா. துரை வீரமணி, மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

திருவொற்றியூர் 13-வது வட்டத்தில்

500 பேருக்கு மதியம் - இரவு உணவு!

கி.மணிவாசகம் - கழகத்தினர் வழங்கினர்!

சென்னை, டிச. 8 - சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம். 13-வது வட்டத்தில் அடங்கிய சாத்துமாநகர். ஒய். எம். சி. ஏ. காந்திநகர், உதயசூரியன் இரண்டாவது தெரு, காந்தி நகர் லிங்க் ரோடு ஆகிய தெருக்களில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 500 க்கும் மேற்பட்ட மக்களுக்கு மதியஉணவு மற்றும் இரவு உணவை தி.மு.க. முன்னாள் - இந்நாள் நிர்வாகிகள் கே.எஸ். ஆனந்தன், டி.கதிரவன், ஜெ.கருணாநிதி,கே.ஜானகிராமன், முன்னாள் கவுன்சிலர் செ.முரளிதரன், ஆர். ரவிச்சந்திரன், பி.ராமராஜ், ஜே. சுந்தரம், கே.யுவராஜ், எம்.ரஞ்ஜித்குமார், டி.இ.பரணி குமார், என்.உத்தமன், என்.அனில், குமார் மற்றும் சந்தோஷ்குமார் ஜெயின் உட்பட பலர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியை முன்னாள் தொண்டர் அணித் தலைவர் கி. மணிவாசகம் ஏற்பாடு செய்திருந்தார்.

தி.மு.க. சட்டத்துறை சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா"வினை யொட்டி

இளம் வழக்கறிஞர்களுக்கான 6வது மண்டல பேச்சுப் போட்டி!

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை!

சென்னை, டிச. 8 - "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினை யொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில்,சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சு போட்டிகளை கீழே குறிப்பிட்டள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமேநடத்தப்படும்.

போட்டிக்கான தலைப்பு

கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி - இளம் வழக்கறிஞர்கள்

மேற்சொன்ன இந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிடவேண்டும். மாநிலம் முழுதும் உள்ள சட்ட கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் 5 மண்டலங்களில் பேச்சுப் போட்டி நடை பெற்று முடிந்ததைத் தொடர்ந்து, தற்போது 6 வது மண்டலப் பேச்சுபோட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின் படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசு ரூபாய் 50,000/- தங்கப் பதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 25,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு - ரூபாய் 15,000/-தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/- வெண்கலப்பதக்கம், சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" நீலாங்கரை, "ஆர்.கே.கன் வென்ஷன் சென்டரில்" நடைபெறும். அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/- தங்கப தக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு - ரூபாய் 50,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/- தாமிரப்பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு - ரூபாய் 10,000/-வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்!

கே.எஸ்.இரவிச்சந்திரன் (சட்டத்துறை இணைச் செயலாளர் 98400-22250), ஜெ.பச்சையப்பன் (சட்டத் துறை துணைச் செயலாளர்-98402-60178), கே.சந்துரு சட்டத் துறை துணைச் செயலாளர் 94440-06999), கே.ஜே. சரவணன் (தலைமைக் கழக வழக்கறிஞர் - 98410-57345)

6 வது மண்டல பேச்சுப் போட்டி

9.12.2023 - காலை 9.00 மணி, திருவாரூர், "கலைஞர் கோட்டம்" (வழக்கறிஞர்கள்),

போட்டியின் நடுவர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான், வழக்கறிஞர் நன்மாறன்

திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், திருவண்ணா மலை, நீலகிரி, ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்காலைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள் பங்கு பெறும் தகுதியுடையவர்கள் ஆவர்.

இவ்வாறு சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அறிவித்துள்ளார்.

எழும்பூர் தொகுதியில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகள் - நிவாரணப் பொருட்கள்!

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச.8- மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் நேரில் சென்று மீட்பு-நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், கடந்த நான்கு நாட்களாக அத்தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று பொதுமக்களின் தேவைகளைக் கேட்டறிந்து, மீட்பு-நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

04.12.2023 அன்று இரவு மழை பெய்து கொண்டிருந்த நிலையிலேயே, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 61-ஆவது வட்டம் அய்யாசாமி குடிசைப் பகுதி, வரதராஜபுரம் ஆகிய பகுதிகளை ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்களை வரதராஜபுரத்திலுள்ள சென்னை மாநகராட்சிப் பள்ளியில் தங்கவைக்கும் ஏற்பாடுகளைச் செய்தார். மேலும், அவர்களுக்குப் புடவை, பிஸ்கெட் ஆகியவற்றையும் வழங்கினார். இந்நிவாரண நடவடிக்கை குறித்து முதலமைச்சர் அவர்கள் இ.பரந்தாமனிடம் கைபேசி வழியே தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

05.12.2023 அன்று, இரண்டாவது நாளாக, வார்டு எண்.58-க்குட்பட்ட சூளை நெடுஞ்சாலை, சூளை மார்க்கெட், சைடன்ஹாம்ஸ் ரோடு; வார்டு எண்.77-க்குட்பட்ட டிமலஸ் ரோடு, தட்டாங்குளம், காட்டூர் நல்லமுத்து தெரு, குட்டி தெரு; வார்டு எண்.78-க்குட்பட்ட பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, வீ.வீ.கோவில் தெரு, ஆலத்தூர் சுப்பிரமணி தெரு, சட்டண்ணன் தெரு ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று, பொதுமக்களின் தேவைகளைக் கேட்டறிந்து மீட்பு-நிவாரண நடவடிக்கைளைத் துரிதப்படுத்தினார்.

மேலும், மண்டலம் 6-ஐச் சேர்ந்த மண்டல அலுவலரைச் சந்தித்து, வார்டு எண்.77 மற்றும் 78-இல் புயல்- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குவதற்காக, 77-ஆவது வட்டம், டிமலஸ் சாலையில் உள்ள ஹஜ் கமிட்டியில் தனி சமையல் கூடம் அமைக்க ஏற்பாடு செய்தார். இதனைத் தொடர்ந்து, அவ்வார்டுகளைச் சேர்ந்த புளியந்தோப்பு, சுந்தரபுரம், தட்டாங்குளம், குமாரசாமி ராஜாபுரம், டிமலஸ் ரோடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ஏற்பாட்டில் அச்சமையல் கூடத்தில் சமைக்கப்பட்ட இரவு உணவு வழங்கப்பட்டது.

06.12.2023 அன்று, மூன்றாவது நாளில், வார்டு எண்.58, 61, 77 மற்றும் 78-ஐச் சேர்ந்த நடேசன் நகர், அய்யாசாமி குடிசைப் பகுதி, பி.கே.காலனி, தட்டாங்குளம், முனுசாமி தெரு, காட்டூர் நல்லமுத்து தெரு, ஆதி ஆந்திரா பகுதி, காஞ்சிபுரம் முனுசாமி தெரு, அஷ்டபுஜம் சாலை, முருகேசன் தெரு, ரங்கையா செட்டி தெரு, மாணிக்கம் செட்டி தெரு, டி.கே.முதலி தெரு, ஆண்டியப்பன் தெரு, ஆலத்தூர் சுப்பிரமணி தெரு, ஆறுமுத்து மேஸ்திரி தெரு, பெரிய தம்பி தெரு, வீ.வீ. கோவில் தெரு, சுப்பாநாயுடு தெரு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு இ.பரந்தாமன், ஏற்பாட்டில் 2,000 பால் பாக்கெட்டுகள், 2,000 பிரெட் பாக்கெட்டுகள், 2,000 பிஸ்கெட் பாக்கெட்டுகள் விநியோகிக்கப்பட்டன.

108-வது வட்டம், தாஸ்புரம் பகுதியில் வெள்ள நீர் வடியாததால், அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சேத்துப்பட்டு, டாக்டர் குருசாமி பாலத்தில் மறியல் செய்துவரும் தகவலையறிந்து, இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., அவர்களைச் சந்தித்து, அவர்களது தேவைகளைக் கேட்டு அறிந்தார். அதனைத் தொடர்ந்து அவர்கள் தமது சாலை மறியலைக் கைவிட்டனர். இதன் பின்னர் மாநகராட்சி அதிகாரிகளைத் தொடர்புகொண்டு, தாஸ்புரத்தில் தேங்கி நின்ற மழை நீரை super sucker வாகனத்தைப் பயன்படுத்தி அப்பறப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, வெள்ள நீர் வெளியேற்றப் பட்டது. மேலும், சேத்துப்பட்டு, சுப்பராயன் தெருவிலுள்ள சென்னை ஆரம்பப் பள்ளியில் முகாம் அமைத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாஸ்புரம் மக்களை அம்முகாமில் தங்க வைத்து, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் தேவைகளையும் செய்து கொடுத்தார்.

07.12.2023 அன்று, நான்காவது நாளில், எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட 58-ஆவது வார்டு காளத்தியப்பா தெருவைச் சேர்ந்த பொதுமக்கள் மின்சாரம் வழங்கக் கோரி சூளை நெடுஞ்சாலையில் மறியல் செய்துவரும் செய்தியை அறிந்து, அங்கு சென்ற இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அம்மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்ததோடு, அத்தெருவிற்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ததை அடுத்து, ஒரு மணி நேரத்தில் அத்தெருவிற்கு மின்சாரம் வழங்கப்பட்டது.

வார்டு எண்.61-இல் உள்ள எல்.ஜி.ரோடில் வசித்து வரும் பொதுமக்கள் தமக்குக் குடிதண்ணீர் வழங்க வேண்டும் என எம்.எல்.ஏ.விடம் கோரியதையடுத்து, தண்ணீர் லாரியை வரவழைத்து, அவர்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

மேலும், வார்டு எண்.99-ஐச் சேர்ந்த சாஸ்திரி நகர் முதல் தெரு தொடங்கி பதினைந்தாவது தெரு வரையிலும்; புல்லாபுரம் முதல் தெரு தொடங்கி எட்டாவது தெரு வரையிலும்; மற்றும் ஓசான்குளம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு, பூபதி நகர் ஆகிய பகுதிகளையும்;

வார்டு எண்.61-ஐச் சேர்ந்த அய்யாசாமி குடிசைப் பகுதி, நரியங்காடு காவலர் குடியிருப்பு, டிரைவர் தெரு, வரதராஜாபுரம், டிரான்ஸ்போர்ட் லேன், தியாகராஜன் தெரு, சின்னக் குழந்தை தெரு ஆகிய பகுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு, அப்பகுதிகளில் வெள்ள நீர் வடிந்துவிட்டதைத் தொடர்ந்து, அப்பகுதிகளைத் தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. - பி.கே.மூர்த்தி - டி.எஸ்.பி.ராஜகோபால் முன்னிலை !

89-வது வட்டத்தில் நிவாரணப் பணிகள்!

எம்.இ.சேகர் தலைமையில்!

சென்னை, டிச.8- சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் தெற்குப் பகுதி, 89-வது வட்டம்.

89-வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. (வடக்கு பகுதி செயலாளர்), 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி எம்.சி., அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ். பி. இராஜகோபால் எம்.சி. (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர்), வட்டக் கழக செயலாளரும், மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் ஆகியோரின் தலைமையில் மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்புப் பணி மேற்கொண்டதுடன், நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.